Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# ஸ்ரீ அரவிந்தர் ஆசிரம அன்னையின் ஓவியங்கள் - புதுச்சேரி

**காயத்ரி.தீ[1],முனைவர்.ஷீலா.பா[2]**
**சிற்பத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், இந்தியா.**
**artistgayatry@gmail.com1, sheelaudaiachandran@gmail.com2**

45

**ஆய்வுச்சுருக்கம் :**

ஓவியங்களும் சிற்பங்களும் மனித வாழ்வியல் வரலாற்றின் நிகழ்வுகளை வெளிப்படுத்தும் ஓர் கருவியாக விளங்குகின்றன. இவை இரண்டும் ஒரு வரலாற்றின் கலை, கலாச்சாரம் மற்றும் வாழ்க்கைமுறை ஆகியவற்றை எடுத்துக்காட்டும் சான்றுகளாகும் ஓவியர் என்பவர் அவர் மனதில் தோன்றும் காட்சிகளில் உள்ள அனைத்து கூறுகளையும் ஒர்பரப்பில் ஓவியமாக வெளிப்படுத்திவிடுகிறார். அப்படியொரு தலை சிறந்த ஓவியக் கலைஞரையும் அவரது ஓவியங்களையும் பற்றி இந்த ஆய்வில் காண்போம் .

பொதுவாகஆன்மீகவாழ்க்கைப்பயணத்தில்பயணிக்கும் ஒருவர், தனது வாழ்நாளில் ஓர் ஓவியக் கலைஞனாக இருந்திருப்பது வரலாற்றில் மிக அரிதான ஒன்றே. ஓவியராகவும் ஆன்மீக பெண்மணியாகவும் ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமத்தில் வாழ்ந்த, அனைவராலும் “அன்னை” என்று அன்போடு அழைக்கப்பட்ட மிர்ரா அல்ஃபாஸா *[Mirra Alfassa]* அவர்கள் ஓர் ஆன்மீக பெண்மணி மட்டுமின்றிச் சிறந்த ஓவியக்கலைஞரும் ஆவார். அவர் நிலக்காட்சி ஓவியங்கள், உருவ ஓவியங்கள், கோட்டு ஓவியங்கள், ஆக்க ஓவியங்கள் போன்ற பல்வேறு ஓவிய படைப்புகளைச் செய்துள்ளார், அவற்றில் புதுச்சேரியில் ஆசிரம கலைக்கூடத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள சில குறிப்பிட்ட உருவ ஓவியங்களை ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது, அவற்றின் அழகியல், தகவல்கள், உக்திகள் மற்றும் ஓவியத்தின் பாணியில் ஏற்பட்ட வளர்ச்சிகள், ஓவியரின் ஓவியத்திறமை ஆகியவற்றை உலகிற்கு எடுத்துரைக்கும் விதமாகவும் இந்த ஆய்வு அமையும்.

**திறவு சொற்கள்:** புதுச்சேரி - அன்னை - ஓவியரின் வரலாறு – கலைவாழ்க்கை - உருவ ஓவியம் - ஓவியத்தின் அழகியல் – பாணி - உத்தி.

**முன்னுரை:**

மிர்ரா அல்ஃபாஸா அவர்கள் இளம் பருவத்திலேயே ஓவியக்கலையின் மீது அதீத ஆர்வம் கொண்டிருந்தபோதும், ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமத்தின் தலைவராக அவர் பொறுப்பேற்ற பிறகு அவருடைய செயல்பாடுகள் அனைத்தும் தீவிர ஆன்மீக முயற்சியையும், அதன் வளர்ச்சியையும் சார்ந்தே இருந்தது. இதனால் கலையின் மீது அவர் கொண்டுள்ள பார்வை சற்று குறைந்தே காணப்பட்டது எனலாம். ஆகவே அவர் ஓர் திறமையான ஓவியக்கலைஞர் என்று யாராலும் அறியப்பட வில்லை. இருப்பினும் அவரது ஓவியங்கள் பிரான்ஸ், அல்ஜீரியா, ஜப்பான் மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் இருப்பதாகத் தெரியவருகிறது. இவர் சுமார் 200 க்கும் மேற்பட்ட பல்வேறு வகையான ஓவியங்களை வரைந்துள்ளார். அதில் சுமார் 40 க்கும் மேற்பட்ட கித்தான் மற்றும் மரசட்டகத்தில் எண்ணெய் வண்ண ஓவியங்களைச் செய்துள்ளார். மேலும் சுமார் 140 க்கும்

மேற்பட்ட கோட்டு ஓவியங்களைக் காகிதத்தில் கருப்பு மை, கரி, பென்சில் மற்றும் பேனா போன்றவற்றைப் பயன்படுத்தியும் மற்றும் தந்தத்திலும் ஓவியம் வரைந்துள்ளார். மேற்கூறிய விவரங்களில் சுமார் 100 க்கும் மேற்பட்ட உருவ ஓவியங்களைச் செய்துள்ளார். அவற்றில் குறிப்பாக 5 "உருவ ஓவியங்களை" பற்றிக்காண்போம்.

**ஆய்வின் நோக்கம் :**

இந்த ஆய்வின் நோக்கம் புதுச்சேரியிலுள்ள ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமத்தில் வாழ்ந்த, மிர்ரா அல்ஃபாஸாவின் 5 "உருவஓவியங்கள்" பற்றிய தகவல்களை வழங்குதல் ஆகும் .

**ஆய்வின் குறிக்கோள்:**

- ஓவியரின் வரலாற்று பின்னணி பற்றிய தகவல்களை வழங்குதல்.
- இந்த ஆய்வில் கிடைக்கக்கூடிய தரவுகள், ஆதாரங்கள் மற்றும் புகைப்படங்களைப் பதிவு செய்தல்.
- ஓவியத்தின் வண்ணங்கள் மற்றும் பாணியை ஆராய்தல்.
- ஓவியங்களின் வடிவங்கள் மற்றும் அதன் நுட்பங்கள் குறித்த தகவல்களை வழங்குதல்.
- மிர்ரா அல்ஃபாஸாவின் உருவ ஓவியங்கள் பற்றிய விரிவான தகவல் மதிப்பாய்வை வழங்குதல்.

**ஆய்வியல் முறை :**

- புதுச்சேரியின் ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமத்தில் உள்ள அலுவலகங்கள், ஓவியக் கலைக்கூடம் ஆகியவற்றை நேரில் ஆய்வு செய்தல்.
- பாரம்பரிய ஓவியர்கள் மற்றும் வரலாற்று ஆய்வாளர்களிடம் நேர்காணல்.
- ஓவியர்கள் மற்றும் கலை ஆய்வாளர்களிடம் கலந்துரையாடல்.
- கலை மற்றும் ஓவியக் கலைபுத்தகங்களைப் பார்வையிடுதல்.
- இந்த ஆய்வில் முதன்மை மற்றும் இரண்டாம் நிலை ஆதாரங்களைப் பயன்படுத்துதல்.

**ஓவியரின் வரலாற்று பின்னணி:**

**குழந்தைப் பருவம் :**

மிர்ரா அல்ஃபாஸா 1878 ஆம் ஆண்டு பிப்ரவரி 21ஆம் தேதி பாரிஸ் நகரத்தில் "மாரிஸ் அல்ஃபாஸா" *[Maurice Alfassa]* மற்றும் அவரது மனைவி "மத்தில்டே இஸ்மாலூன்" ஆகியோரின் *[Mathilde Ismaloun]* மகளாகப் பிறந்தார். ஆரம்பக் காலத்தில் அவர் பல கலை களில் ஆர்வம் கொண்டிருந்தாலும், குறிப்பாக ஓவியக் கலையின் மீதே மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். அவரது கலை வாழ்க்கையைப் பற்றிக் கீழே காண்போம் .

**கலை வாழ்க்கை:**

மிர்ரா அல்ஃபாஸா தனது பன்னிரெண்டாம் வயதிலேயே உருவ ஓவியம் வரைந்தார், அதன் பிறகு பல ஓவியங்களை வரையத் தொடங்கினார். 1892ல் பாரிஸில் நடந்த சர்வதேச ப்ளாங்க் எட் நோயர் *[Blanc et Noir]* கண்காட்சியில் அவரது கரி ஓவியங்களில் ஒன்றான "தி வோன் னே நதியின் பாலம்" *[Le Font de la Divonne (Ain)]* என்ற ஓவியம் காட்சிக்கு வைக்கப்பட்டது. தனது பள்ளிப்

படிப்பை முடித்த பிறகு 1893ஆம் ஆண்டில் பாரிஸ் நகரில் உள்ள ஜீலியன் அகாடமி *[Academic Julian]* கலைப் பள்ளியில் சேர்ந்தார். பிறகு எண்ணெய் ஓவியம் மற்றும் பிற ஓவியநுட்பங்களைக் கற்றுக் கொள்ள ஆரம்பித்தார், இவரின் ஓவியங்கள் அக்காலத்தின் பிரெஞ்சுகலைப் பள்ளிகளில் கற்பிக்கப்பட்ட ஓவியப்பாணிக்கு சிறந்த எடுத்துக்காட்டாக அமைகிறது. மேலும் இவர் ஓவியக் கலைஞரான "ஹென்றி மோரிசெட்டை" *[Henri Morisset]* 1897-ல் திருமணம் செய்தார். இருவரும் இணைந்தே தங்களின் கலைப் பயணத்தை மேற்கொண்டனர். மிர்ரா அல்ஃபாஸாவின் ஆறு ஓவியப்படைப்புகள் 1903, 1904, மற்றும் 1905ஆம் ஆண்டுகளில் புகழ் பெற்ற "தேசிய நுண்கலை சங்கத்தில்" *(Salon De La Societe Nationale Des Beaux-Arts)* இல் காட்சிப்படுத்தப்பட்டன.

இவரது படைப்புகளில் ஆரம்பக் காலத்தின் ஓவியப் படைப்புகளே சிறந்த படைப்புகள் என இவர் கருதினார். அந்தப் படைப்புகள் பல விற்கப்பட்டதாகவும் மற்றும் சிலவற்றை நண்பர்களுக்கு வழங்கியதாகவும் தெரிய வருகிறது. மிர்ரா அல்ஃபாஸா நண்பர்களைச் சந்திக்கவும், ஓவியங்கள் வரைவதற்கும் பல்வேறு நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டார்.

அதே சமயத்தில் ஸ்ரீ அரவிந்தர் 1910 ஆம் ஆண்டு புதுச்சேரிக்கு வந்தார். பிறகு அவரைச் சார்ந்த குழுவோடு ஆசிரமம் ஒன்றை உருவாக்கினார். ஓர் பெரிய ஆன்மீக உணர்தலுக்குப் பிறகு ஆன்மீக வேலைகளில் அரவிந்தர் அவர்கள் ஈடுபட்டார். மிர்ரா அல்ஃபாஸா இளம் வயதிலிருந்தே ஆன்மீகத்திலும், யோகாவிலும் ஈடுபாடு கொண்டிருந்ததால் ஸ்ரீ அரவிந்தரைக்காண 1914 ஆம் ஆண்டு புதுச்சேரிக்கு வந்தார். முதல் உலகப் போரின் காரணமாக 11 மாதங்களுக்குப் பிறகு அவர் மீண்டும் பிரான்ஸ் நாட்டுக்கே திரும்பினார். மிர்ரா அல்ஃபாஸா மீண்டும் இந்தியாவுக்குத் திரும்பியபோது ஆரம்பக் காலத்தில் வரைந்த சில ஓவியங்களைக் கொண்டுவந்தார். பிறகு புதுச்சேரிக்கு வந்த போது ஸ்ரீ அரவிந்தர் ஆசிரம நிர்வாகத்திற்கான முழுப்பொறுப்பையும் மிர்ராஅல்ஃபாஸாவுக்கே 1926 ஆம் ஆண்டு ஏப்ரல் 14ல் வழங்கினார். அதன்பின் அனைவராலும் மிர்ரா அல்ஃபாஸா "அன்னை" என்று அன்போடு அழைக்கப்பட்டார். இக்காலகட்டத்தில் ஆன்மீகப் பணியில் அதிககவனம் செலுத்தியதால் இவருக்கு ஓவியங்கள் வரைவதற்கு அரிதாகவே நேரம் கிடைத்தது. இருப்பினும் ஆரம்பக் காலத்தில் அழகிய மற்றும் கலை மதிப்புள்ள சில ஓவியங்களை வரைந்துள்ளார். அத்தகைய ஓவியங்கள் சிலவற்றை பார்போம் .

**மிர்ரா அல்ஃபாஸாவின் உருவ ஓவியங்கள்:**

புதுச்சேரி ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமத்திலும் மற்றும் ஆசிரம கூடத்திலும் சுமார் 5000 க்கும் மேற்பட்ட ஓவியகலை பொக்கிஷங்கள் உள்ளன. இவை அன்னை மற்றும் ஆசிரம ஓவியர்களின் ஓவியங்கள் ஆகும். அதிலும் குறிப்பாக மிர்ரா அல்பாஸா மட்டுமே சுமார் 200 க்கும் மேற்பட்ட ஓவியங்களை வரைந்துள்ளார் என்பதையும் அறியமுடிகிறது. அவர் பல உருவ ஓவியங்களை வரைந்திருந்தாலும், சிறப்புமிக்க, பக்கவாட்டில் அமைந்துள்ள 5 உருவ ஓவியங்கள் இந்த ஆய்வில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. மேலும் இவ்வனைத்து ஓவியங்களும் ஆரம்பக் காலத்தில் ஓவியம் பயின்ற பொழுது, ஒரு நபரை பார்த்து வரைந்ததாக இருக்கலாமெனக் கருதப்படுகிறது. இவைகள் எண்ணெய் வண்ணங்களைக் கொண்டு, பிரான்சில் இருந்த போது தீட்டிய ஓவியங்களாகும். அந்தக்

குறிப்பிட்ட 5 ஓவியங்களைப் பற்றி விரிவாகக் காண்போம் .

**அவையாவன:**

1. மிர்ரா அல்ஃபாஸா, **ஆரம்பக்கால படிப்பு** *[Early Study]* 1895, கேன்வாஸில் எண்ணெய் வண்ணம், 59 x 44.5 செ.மீ.
2. மிர்ரா அல்ஃபாஸா, **ஆரம்பக்கால படிப்பு** *[Early Study]* 1895, கேன்வாஸில் எண்ணெய் வண்ணம், 54 x 48 செ.மீ.
3. மிர்ரா அல்ஃபாஸ, **ஆரம்பக்கால படிப்பு** *[Early Study]* 1895, கேன்வாஸில் எண்ணெய் வண்ணம், 54 x 44 செ.மீ.
4. மிர்ரா அல்ஃபாஸா, **தோள்கள்**, *[Shoulders]* 1903-1908, பலகையில் எண்ணெய் வண்ணம், 14.5 x 11 செ.மீ.
5. மிர்ரா அல்ஃபாஸா, **தூங்கும் பெண்** *[Sleeping Women]* 1903-1908, கேன்வாஸில் எண்ணெய் வண்ணம், 65 x 65 செ.மீ.



1. மிர்ரா அல்ஃபாஸா, ஆரம்பக்கால படிப்பு, 1895, கேன்வாஸில் எண்ணெய் வண்ணம், 59 x 44.5 செ.மீ.

இவ்வோவியத்தில் முகஅமைப்புப் பக்கவாட்டில் அமைந்துள்ளது. இவர் மேற்கத்திய ஒளிபுகும் மெல்லிய வெண்ணிற ஆடையை அணிந்து உள்ளார் .அதன் மேல் பழுப்புப் பச்சை நிறத்தில் மேல் அங்கி அணிந்துள்ளது போல் தோற்றம் காணப்படுகிறது. மேலும் அவரது எளிய சிகை அலங்காரம் பழுப்பு மற்றும் கருப்புநிறத்தில் உள்ளது, அவரது முகம் மற்றும் உடல் வெளிர் தோல் நிறம் கொண்டுள்ளது. இவ்வோவியத்தில் முகமானது சற்றே களைப்புடனும், சோர்வுடனும் இருப்பது போல உள்ளது. கண்கள் சற்றே மூடிய நிலையிலும், கூர்மையான மூக்கையும், மெல்லிய உதடுகளையும், ஒட்டிய கன்னங்களையும் கொண்டுள்ளது போல் தோற்றம் காணப்படுகிறது. மேலும் இந்த ஓவியத்தில் உள்ளவர் மெலிந்த உடலுடன் இளமையான தோற்றத்திலும் காட்சியளிக்கிறார், இஃது ஓர் ஆரம்பக் கால ஓவியமாக இருக்கலாம். ஒளியானது வலது புறத்தில் தலைக்கு மேலே இருந்து வருவது போல் உள்ளது. அதனால் முகத்தின் நிழல் கழுத்திலும், தோள் பட்டையிலும் விழுவதுபோல் உள்ளது.

பின்புலத்தையும் முன்புறத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் தூரிகையின் வீச்சுகள் வேறுபடுகின்றன. மேலும் இவர் தூரிகையை மிகச் சுதந்திரமாகப் பயன்படுத்தியுள்ளார். தலை

முடியின் அமைப்பும் ஒளிபுகும் வெள்ளைஆடையில் தூரிகை வீச்சுகளும் மிக எதார்த்தமாகக் கையாண்டு உள்ளார். மேலும் ஓவியர் மென்மையற்ற தூரிகை வீச்சுகளையும் *(Rough brush stroke)* மற்ற இடங்களில் மென்மையான தூரிகை வீச்சுகளையும் (smooth brush stroke) செய்துள்ளார். ஓவியத்தின் தொகுப்பு *[Composition]* மிகச் சரியாகப் பொருந்தி உள்ளது. இதன்மூலம் இவர் உருவ ஓவியம் வரைவதில் கைதேர்ந்தவர் என்பதை அறிய முடிகிறது. மேலும் இந்த ஓவியம் திருமணம் ஆவதற்கு முன்பு வரைந்த ஓவியமாக இருக்கலாம். இந்த ஓவியத்தில் தோலின் வண்ணத்தைப் பின்புலத்தில் பயன்படுத்தி வண்ணங்களைச் சமநிலை *(Balance)* செய்துள்ளார். இதனால் பார்வையாளரின் பார்வை ஓவியத்தில் சீராகப் பரவுகிறது. மேலும் இந்த ஓவியத்தில் வலது கன்னத்தில் வண்ணம் சிதிலமடைந்துள்ளது. இவரின் தலையின் மீது பின்புலத்தில் கித்தான் *(Canvas)* கிழிந்தது போலும் ,வண்ணத்தின் அடுக்கு சில இடத்தில் உதிர்ந்தது போலும் உள்ளது. மேலும் வண்ணம் பெரும் பான்மையாக மங்கியது போன்றே காணப்படுகிறது .இந்த ஓவியமானது வடிவமைப்புகள் இல்லாத வெளிர் பழுப்பு நிறச்சட்டகத்தைப் பயன்படுத்தி வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஓவியத்தைக் காணும் பொழுது இளமையான உணர்வுகளை வெளிப்படுத்தும் விதத்தில் அங்க அமைப்பு அமைந்துள்ளது. இதன் மூலம் ஓவியரின் இளமையான மனநிலையையும் அவரது ஓவியத் திறமையும் நன்கு அறிய முடிகிறது.




2. மிர்ரா அல்ஃபாஸா, ஆரம்பக்கால படிப்பு, கேன்வாஸில் எண்ணெய், 54 x 48 செ.மீ., சுமார் 1895.

ஒவ்வொருவரும் உருவமாதிரியை வரையும் போது அவருக்குப் பிடித்த திசையில் வரைவர். அதுபோல மிர்ரா அல்ஃபாஸா உருவ ஓவியத்தை அதிகமாகப் பக்கத்தோற்ற அமைப்பிலேயே வரைந்துள்ளார். சிகை அலங்காரமும் அதிகமாகக் கொண்டை கட்டியவாறும் மற்றும் இக்கொண்டை முறையாக அலங்கரித்தவாறும் உள்ளது, மேலும் தலைமுடியின் முன்பகுதியில் மகுடம் வைத்தது போன்ற வடிவமைப்பைக் கொண்டுள்ளது. அடர்த்தியற்ற புருவ அமைப்பும், கண்கள் பாதித்திறந்தவாறும் நீண்ட கூர்மையான மூக்கினையும் , மெலிந்த உதடுகளையும் காணமுடிகிறது. பச்சை மார்பு சட்டையை ஓர் புறத்திலும் , ஒற்றை அடுக்கில் வெளிர்தோலின் நிற மெல்லிய துணியைப் போர்த்தியவாறும், அதன்ஓரம் அலங்கரிக்கப்பட்டும் ஆடை அமைப்புக் காணப்படுகிறது.

இவ்வோவியத்தில் ஓவியர் மென்மையான தூரிகை வீச்சுகளைப் பயன்படுத்தி உள்ளார். ஓவியத்தின் ஒளியைப் பொருத்தவரை வலது புறத்திலிருந்து வருவது போன்றே அமைந்துள்ளது. முகத்தின் நிழல் கழுத்தில் நன்றாக விழுந்திருப்பதும் , அதில் உள்ள நரம்புகளின் புடைப்பைப் பார்க்கும் போது ஓவியர் ஆரம்பக் காலத்திலிருந்தே ஓவியத்தில் தொடர் பயிற்சியை மேற்கொண்டுள்ளார் என்பதை நம்மால் உணர முடிகிறது. மேலும் முன்புறத்தில் உருவப்படம் வெளிர் வண்ணத்திலும் பின்புலத்தை நடுத்தர வண்ணத்திலும் செய்துள்ளார். இதில் தலைமுடியில் பழுப்பு, சாறு பச்சை மற்றும் கருப்பு வண்ணத்தைப் பயன்படுத்தியுள்ளார். இவ்வோவியத்திலும் முகம் சோகமாகவே காணப்படுகிறது, ஓர் ஓவியன் எந்த மனநிலையில் ஓவியம் வரைகிறானோ அந்த மனநிலையிலேயே, அவரது ஓவியத்திலும் பிரதிபலிக்கும் என்பது போல, ஓவியர் சோகமான மனநிலையில் ஓவியத்தை வரைந்து இருக்கலாமென அறிய முடிகிறது. இதில் இவரது கையொப்பம் வலது புறத்தின் மேற்புறத்தில் காண முடிகிறது, ஆனால் வருடம் குறிப்பிடப் படவில்லை. இவ்வோவியம் சிறிது சிதிலமடைந்தும் வண்ணம் மங்கிய நிலையிலும் உள்ளது. இவ்வோவியத்தின் சட்டகமானது வடிவமைப்புகள் இல்லாத வெளிர் பழுப்பு நிறத்தில் அமைந்துள்ளது.

இந்தப் பக்க உருவ ஓவியத்தில் ஓவியர் உடற்கூறியலை நன்றாக வெளிப்படுத்தியுள்ளார். மேலும் ஒளி மற்றும் நிழலை மிகச் சிறப்பாகக் கையாண்டுள்ளார்.



3. மிர்ரா அல்ஃபாஸா, ஆரம்பக்கால படிப்பு,கேன்வாஸில் எண்ணெய் ஓவியம், 54 x 44 செ.மீ., 1895.

மற்ற இரு ஓவியங்களை ஒப்பிடுகையில் இது வேறுபட்ட பார்வையிலிருப்பதை நன்கு உணர முடிகிறது. இவ்வுருவப்படம் முதுகுபுறம் தெரியும் வண்ணமும் , முகமானது சற்று இடப்புறம் திரும்பிய வாறும் இருக்கிறது. சிகை அலங்காரமான கொண்டை வடிவமைப்பு மற்ற இரு ஓவியங்களைக் காட்டிலும் மிகவும் சிறப்பானமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவரது ஆடை தடிமனான மென் பட்டுத்துணி போலவும் , சாயப்பச்சை மற்றும் அடர்ந்த பச்சை வண்ணங்கள் கலந்த கலவையாக உள்ளது. வலது புறமாக ஓர் அலங்கரிக்கப்பட்ட வட்ட வடிவம் கொண்ட பெரிய பொத்தான் இருப்பதைப் பார்க்கும் பொழுது, இது ஓர் மேலை நாட்டு ஆடையாக இருக்கலாம் எனத் தெரிய வருகிறது. வெளிர் நிறத்தில் உள்ள கூந்தலானது ஆங்காங்கே சுருள் சுருளாக அமைந்திருப்பதையும்

அதில் ஒளிபடுவதால் சிவப்பு பழுப்பு வண்ணம் மிளிர்வதையும் காணமுடிகிறது. இந்த உருவ ஓவியத்தில் காதின் ஓரமாக நன்கு வடிவமைக்கப்பட்ட கொண்டை ஊசியையும், சிறிய கிரீடம் போன்ற ஒன்றையும் காண முடிகிறது. இவரது உருவ ஓவியங்கள் அனைத்தும் மைய அமைப்பு *(Central composition)* சாயலில் இல்லாமல், ஒன்று வலது புறமாகவும் அல்லது இடது புறமாகவும் உள்ளது. இந்த உருவ ஓவியத்திலும் கூந்தலின் வண்ணம் பின்புலத்தில் சேர்ந்தவாறு இருண்ட நிலையில் காட்சியளிக்கிறது. மேலும் பின்புலம் *(Back ground)* இருண்ட நிறமாகவும், முன்புறம் *(Fore ground)* நன்கு ஒளியுடனும் அமைந்திருப்பதைப் பார்த்தால், சர் பீட்டர் பால் ரூபனெஸ்*[Sir Peter Paul Rubens]* என்ற புகழ் பெற்ற ஓவியரின் *[Portrait Of A Young Woman]* ஓவியம் போல உள்ளது, மேலும் இவ்ஓவியம் மேற்கூறிய ஓவியரின் *(Braque)* பரோக் பாணியிலான ஒளி மற்றும் இருட்டு என்பதன் அடிப்படையில் அமைந்திருக்கலாம்.

இவ்ஓவியத்தில் குறிப்பாக முதுகு பகுதியில் உள்ள வண்ணங்கள் ஆங்காங்கே வெடிப்பு கோடுகளுடன் காணப்படுகிறது. காரணம் அதன் வண்ண அடுக்குகள் மெல்லியதாக இருந்திருக்கலாம். பொதுவாக இவ்வோவியத்தின் வண்ணங்கள் மங்கிய தன்மையுடன் காட்சியளிக்கின்றன. பின்புலம் சிறிது சிதிலமடைந்து காணப்படுகிறது. இதன் சட்டகமானது எந்த வடிவமைப்பும் இல்லாத பழுப்புநிறத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இவ்வோவியத்தில் சுற்றிலும் இருண்டும் , ஓர் பகுதி மட்டும் ஒளி இருப்பது போன்று உள்ளதே சிறப்பாகும். இது போன்ற முற்றிலும் திரும்பி இருக்கும் பக்க தோற்ற அரை உருவ ஓவியம் மிக அரிதாகவே ஓவியர்களால் வரையப்படுகிறது .அந்தவகையில் நோக்கினால் இதுமிகவும் தனித்துவமானது ஆகும்.




4. மிர்ரா அல்ஃபாஸா, தோள்கள், பலகையில் எண்ணெய் ஓவியம், 14.5 x 11 செ.மீ., 1903-1908.

இவ்ஓவியமும் முதுகு பகுதி காணும் வண்ணமும் முகம் இடது புறமாகத் திரும்பியவாறும் அமைந்துள்ளது. மிகச் சிறிய அளவுடைய இவ்வோவியத்தை மிகவும் நேர்த்தியாகப் படைத்துள்ளார். இதில் சிகை அலங்காரம் பார்ப்பதற்கு ஓர் தொப்பி அணிந்தவாறு உள்ளதே மிகவும் சிறப்புடையது. இதில் ஆங்காங்கே பூக்கள் கொண்ட கொண்டை ஊசியைப் பயன்படுத்தி

அலங்கரித்துள்ளனர். கூந்தலுக்கு மஞ்சள் காவி, வெளிர் பழுப்பு மற்றும் அடர்ந்த பழுப்பு வண்ணத்தைப் பயன்படுத்தி உள்ளார். மேலும் கொண்டையின் நிழலானது முகத்தில் விழுவதை நன்றாகக் காண முடிகிறது. முகத்திலும், உடலிலும் மேலை நாட்டவருக்கே உரிய வெளிர் தோல் நிறத்தைக் கொண்டு ஒளிபுகா *(Opqaue)* முறையை ஓவியர் கையாண்டுள்ளார். இருப்பினும் முகத்தில் விரிவான விவரங்கள் காணப்படவில்லை. ஆடை அமைப்பை காணும் பொழுது வெளிர் வண்ண மேலை நாட்டுக் கவர்ச்சி ஆடை போலவே உள்ளது. இதில் பின்புலத்தில் உள்ள பச்சை கலந்த நீல வண்ணத்தை அவரது வெள்ளை ஆடையில் சிறிது கலந்தே பயன்படுத்தியுள்ளார்.

பொதுவாக இவ்வோவியத்தைப் பார்க்கும் பொழுது குறுகிய நேரத்தில் வரைந்த ஓவியமாக இருக்கலாம் எனத் தெரிய வருகிறது. இதுவரை நாம் பார்த்த ஓவியத்திலிருந்து இஃது சில ஆண்டுகளுக்குப் பின்னர் வரைந்த ஓவியம் என்பதால் இதில் தூரிகை வீச்சு விரைவு தன்மையுடனும், மற்றும் சுதந்திரத்தன்மையுடனும் பயன்படுத்தி உள்ளார் என்றே கூறலாம். இது இவ்வோவியரின் தொழில் முறை திறனைக் காட்டுகிறது. மேலும் இவ்வோவியம் பியர்- அகஸ்டே ரெனோயர் *[Pierre-Auguste Renoir]* என்ற பிரெஞ்சு ஓவியரின் ஓவியபடைப்பின் *[A young Girl With daisies]* சாயல்களிலும், ஆரம்பக்கால உணர்வுப் பதிவுவாத பாணிலும் *(Impressionism)* காணப்படுகிறது. இதன் சட்டகமும் எந்த வடிவமைப்பும் இல்லாத பழுப்பு வண்ணத்தைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதுவரை பார்த்த அனைத்து ஓவியத்திலும் பின்புலத்துடன் முன்புறமும் சேர்ந்தவாறு வண்ண சமநிலையுடன் இருந்தது. ஆனால் இவ் ஓவியத்தில் மட்டும் பின்புலம் பச்சை வண்ணத்துடன் அதிலிருந்து முன்புறம் நன்கு வேறுபட்டும் காணப்படுகிறது. உடலின் நிறம் சிறிதளவு பின்புலத்தில் கலந்து இருந்திருந்தால் பார்ப்பதற்கு வண்ணச் சமநிலையுடன் நன்றாகப் பொருந்தியிருக்கும் .



5. மிர்ராஅல்ஃபாஸா, தூங்கும் பெண்,கேன்வாஸில்எண்ணெய், 65 x 65 செ.மீ., 1903-1908.

இவ்வோவியமும் மற்ற ஓவியங்களை விட மிகவும் வித்தியாசமானது ,ஏனெனில் இஃது ஓர் நிர்வாண ஓவியம் . ஒரு பெண் உறங்குவது போன்ற காட்சியைக் கற்பனையிலோ, நேரிலோ பார்த்து வரைந்த ஓவியமாக இருக்கலாம் . மேலும் அவர் வெண்ணிற படுக்கையில் தலையணையை வைத்து மேலிருந்து கீழாகச் சற்றே சாய்ந்த நிலையில் தலையை இடது புறமாகவும் , மார்பகங்கள் மேலே

தெரியும் வண்ணமும் , இடுப்பு பகுதிக்குக் கீழே உடல் ஓர் புறமாகச் சாய்ந்தவாறும் உள்ளது. மேலும் அவளைக்காணும் பொழுது ஓய்வெடுத்துக் கொண்டிருப்பது போலவும் வலது கையின் விரல்கள் அவளது தலை முடியை அழகாக வருடியவாறும் , இடது கை தலையின் மேற்புறமாகத் தொட்டுக் கொண்டும் உள்ளது. அவளது நீண்ட கூந்தல் மிக அழகாக மேலிருந்து கீழாக நளினமாகச் சரிந்து காணப்படுகிறது. இக் கூந்தல் மேலை நாட்டுப் பெண்களுக்கே உரியச் செம்மண் நிறத்தில் அமைந்துள்ளது. மேலும் வெளிர் பழுப்பு மற்றும் அடர் பழுப்பு நிறமும் கலந்தே காணப்படுகிறது. ஒளிக்காக மஞ்சள் காவி வண்ணம் பயன்படுத்தப்பட்டுள்ளது. பக்க தோற்றத்தில் முகமும், கண்கள் உறங்குவது போலவும், மூக்கு சிறிதளவே தெரிகிறது. முகத்தின் மறு பக்கத்தில் உள்ள கூந்தல் சற்றேதெரியும் வண்ணம் உள்ளது. மேலும் உடலில்,வெளிர் தோலின் நிறத்தைக் கொண்டு, மென்மையான தூரிகை வீச்சுகளையும், மார்பகங்களில் ஒளிபுகா தூரிகை வீச்சுகளையும் பயன்படுத்தி உள்ளார். இவளின் மார்பகங்களின் அமைப்பைப் பார்க்கும் போது இளம் பெண் என்பதை அறிய முடிகிறது. மார்பகங்களின் நிழல் உடலிலும், கைகளின் நிழல் மெத்தையிலும் அடர்ந்த வண்ணத்தில் விழுகிறது.

இவ்வோவியத்தில் முன்னணியில், மேஜையை அலங்கரிக்கும் பூச்சாடியும் , பூக்கூடையும், பழங்களும், குவலையும் அதற்கு அருகில் ஓர் புறத்தில் கண்ணாடி கவிழி *(Tumbler)* மறு புறத்தில் சிறிய கிண்ணமும் உள்ளது. பூக்கூடையானது அடர்பழுப்பு, வெளிர் பழுப்பு மற்றும் கருப்பு வண்ணங்களால் தீட்டடப்பட்ட குறுக்கும் நெடுக்குமாக பின்னிய கூடையைக் கொண்டுள்ளது. பூக்கூடையில் உள்ள பூக்கள் உண்மையான பூக்களாக இருக்கலாம், ஏனெனில் மிர்ரா அல்ஃபாஸாக்குப் பூக்கள் என்றால் மிகவும் விருப்பம் , அதனால் என்னவோ அந்தப் படுக்கை அறையில் பூக்களைக் கொண்டு நிரப்பியுள்ளார். இதில் சிறிய மொட்டுக்களும் மலர்ந்த மலர்களும் வெவ்வேறு திசைகளில் வெள்ளை, வெளிர் இளஞ்சிவப்பு மற்றும் நடுத்தர இளஞ்சிவப்பு வண்ணத்தில் காணப்படுகிறது.

பூச்சாடிக்கு அருகில் ஓர் மலர் குவளை அடர்ந்த பழுப்பு வண்ணத்திலும், அதில் இலைகளுடன் கூடிய இரு மலர்களும் அருகில் உள்ள மலரின் வண்ணங்களிலே காணப்படுகிறது. இதனருகே ஆரஞ்சுபழங்கள் வெளிர்செம் மஞ்சள் மற்றும் அடர்செம் மஞ்சள் போன்ற வண்ணங்களில் காணப்படுகின்றன. இடது புறத்தில் ஓர் கண்ணாடி குவளை சுருள் போன்ற அழகிய வடிவமைப்பு கொண்டுள்ளது. இதன் மெத்தை விரிப்பின் வெண்மை நிறமும் ஆரஞ்சு பழத்தின் வெளிர் செம்மஞ்சள் நிறமும் இக் கண்ணாடி குவளையில் பிரதிபலிப்பது போல் உள்ளது. அதனருகே ஓர் சிறிய பீங்கான் கிண்ணம் காணப்படுகிறது.

ஓவியத்தின் பின்புலம் துணியாகவோ அல்லது சுவராக இருக்கலாமெனக் கருதப்படுகிறது. இது நீலம் கலந்த வெளிர் பச்சைநிறத்திலும் மற்றும் ஊதா நிறத்திலும் காணப்படுகிறது. இதில் மிர்ராஅல்ஃபாஸா உணர்வுப்பதிவுவாத தூரிகை வீச்சைப் பயன்படுத்தி உள்ளார். மேலும் ஓவியரின் கையொப்பமானது ஓவியத்தின் இடது புறத்தின் அடியில் உள்ளது. இந்த ஓவியமானது, மொட்டுகள், இலைகள் மற்றும் பூக்களைக் கொண்ட அமைப்பில் கருப்பு வண்ணத்தாலான மரசட்டகத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மிர்ரா அல்ஃபாஸாவின் காலகட்டத்திலேயே உணர்வுப்பதிவுவாத கலைஇயக்கமும் *(Impressionism Art Movement)* மிகவும் பிரபலமாக இருந்தது. இந்த உக்தியை அவர் பின்புலத்தில் இழை அமைப்பை *(Texture)* உருவாக்கப் பயன்படுத்தி இருக்கலாம். மேலும் இவ் ஓவியர் உணர்வுப்பதிவுவாத ஓவியர்களுடன் நட்புறவு கொண்டிருந்ததால் அதிலிருந்து அவருக்கு இந்தத் தாக்கம் வந்திருக்கலாம் எனத் தெரியவருகிறது. உலகப்புகழ் பெற்ற பிரெஞ்சு ஓவியர்களான கிளாட் மோனெட் *[Claude Monet]* அவரின் *[Houses Of Parliament]* ஓவியத்தின் உணர்வுப்பதிவுவாத தூரிகை வீச்சுகளின் சாயல்களையும், எட்வர்ட்டெகாஸ் *[Edgar Degas]* அவரின் *[The Dark Side Of Ballet Dancers]* ஓவியத்தின் வண்ணங்களின் சாயல்களையும் இவ்வோவியத்தில் காணமுடிகிறது. இதில்மட்டுமே மென்மை, மென்மையற்ற தூரிகை வீச்சுகள், ஒளிபுகா முறை போன்ற உத்திகளையும், உணர்வுபதிவுவாதம் என்ற பாணியையும், ஒன்று சேர்ந்தவாறு பார்க்க முடிகிறது என்பதே இதன் சிறப்பாகும் .

**பரிந்துரைகள்:**

மிர்ரா அல்ஃபாஸாவின் விலை மதிப்பற்ற பல்வேறு வகையான ஓவியங்களும் மற்றும் ஆசிரம ஓவியர்களின் ஓவியங்களும் ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமத்திலும் மற்றும் ஆசிரம ஓவியக்கலைக் கூடத்திலும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. அதில் உள்ள ஒரு சில ஓவியங்கள் சிதிலமடைந்தும், நிறங்கள் மங்கிய நிலையிலும், வண்ண அடுக்குகள் உதிர்ந்தும், சில இடங்களில் கிழிந்தும், காணப்படுகின்றது. இத்தகைய மதிப்பு மிக்க ஓவியங்கள் ஆசிரம நிர்வாகத்தின் மூலம் பல்வேறு முறையில்ப ராமரிக்கப்பட்டாலும், இந்தப் பராமரிப்பை மேலும் மேம்படுத்தி அதாவது காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் ஓவியங்களின் தட்பவெப்பநிலை ஓவியத்திற்கு ஏற்றவாறு வைப்பதன் மூலமும், பேணி பாதுகாக்கும் வழிகள் மற்றும் வழிமுறைகள் செய்வதன் மூலமும், இவ்வோவியங்களை இன்னும் மேம்படுத்தப்பட்ட நிலையில் பாதுகாக்கலாம், மேலும் இவ் ஓவியத்தின் தன்மை மாறாமல் புதுப்பித்தலின் மூலம் அவை நீண்ட காலம் பாதுகாப்பாக இருக்கும்.

அரவிந்தர் ஆசிரம ஓவியக் கலைக்கூடத்தில் இருக்கும் புகழ்பெற்ற ஓவியங்களை ஓர் வருடத்தில், குறிப்பிட்ட மாதங்கள் மட்டுமே காட்சிப்படுத்தப்படுகிறது. இஃது இன்னும் கூடுதலாக மக்களின் பார்வைக்குக் காட்சிப்படுத்தப்பட்டால் அன்னையின் இப்புகழ்மிக்க ஓவியங்கள் அனைத்து மக்களாலும் அறியப்படும், மேலும் இத்தகைய மதிப்புமிக்க ஓவியத்தை அச்சிட்டு, அதில் அன்னையின் வார்த்தைகளைப் பதிவிட்டு, அந்த சிறிய வாழ்த்து அட்டையை, ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமத்திற்கு வரும் மக்களுக்கு வழங்கினால்,அவர்கள் இவ்வோவியத்தின் சிறப்பைப் பற்றி அறிய, இது ஓர் வாய்ப்பாக அமையும் என்பதில் ஐயமில்லை.

முடிவுரை:

புதுச்சேரி வரலாற்றில், ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமத்தின் புகழ் உலகளாவிய ஒன்று. அதிலும் அங்கு வாழ்ந்த மிர்ரா அல்ஃபாஸாவின், ஓவியக் கலையின் சிறப்பு, மிகவும் குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு ஓவியரும் ஆரம்பக்காலங்களில் நன்கு அறியப்பட்ட கலைஞர்களின் ஓவியத்தால் ஈர்க்கப்பட்டு

அக்கலைஞர்களின் ஓவியப் பாணியின் தாக்கம், தங்களது ஓவியத்திலும் வெளிப்படும். அவ்வாறே மிர்ரா அல்ஃபாஸாவின் மேற்கூறிய 5 ஓவியங்களைக் காணும் பொழுது ஆரம்பத்தில் அவர் மென்மையான தூரிகை வீச்சுகளையும், பிறகு மென்மையற்ற தூரிகை வீச்சுகளையும், அதற்குப் பின் ஒளிபுகா முறையையும் *(Opqaue)* பயன்படுத்தியுள்ளார். பின்னர் சில புகழ்மிக்க ஓவியர்களின், ஓவியத்தின் பாணியின் தாக்கத்தால், உணர்வுப்பதிவுவாதத்தையும் *(Impressionism)* பயன்படுத்தினார் என அறியலாம். இதிலிருந்து மிர்ரா அல்பாஸாவின் ஓவிய பாணியில் மேலே குறிப்பிட்டவாறு பல்வேறு மாற்றம் ஏற்பட்டுள்ளதை நம்மால் உணர முடிகிறது. அவரது பிற்கால ஓவியங்கள், அவருக்கென்று ஓர் தனித்துவமான பாணியைத் தந்தது. குறிப்பாக ஆன்மீகம் சார்ந்த ஆக்கஓவியங்கள் அதிகமாகச் செய்திருக்கிறார். இத்தகைய ஓவியங்கள் ஒளி மற்றும் நிழல் சார்ந்ததாகவும், வண்ணங்களை நேர்த்தியாக உபயோகப்படுத்தியும் இருப்பதைக் காண முடிகிறது.

இந்தக் கலை பொக்கிஷங்களைப் புதுச்சேரி மக்களிடையே மட்டுமல்லாமல் உலக அளவில் மக்கள் வந்து பார்க்கக் கூடிய ஓர் கலை பொக்கிஷமாக நாம் கருதமுடியும். காரணம் ஆன்மீகம் நாட்டம் கொண்டு பல ஓவியர்கள் இதன் மூலமாக வளர்ந்திருக்க வாய்ப்பு இருக்கிறது. ஆன்மீகத்தில் ஆர்வம் உடைய மேலை நாட்டு ஓவியர்கள் இங்கு வந்து யோகா மற்றும் தியானம் ஆகியவற்றைப் பழகி இந்தக் கருத்துக்களை எடுத்துச் சென்று தங்களது தாய் நாட்டில் ஓவியமாகச் செய்திருக்கலாம் எனத் தெரிகிறது. மேலும் மிர்ரா அல்ஃபாஸா அவரது பழமையான ஓவியப் பாணியிலிருந்து மாறுபட்டு ஆன்மீகப் பயிற்சியின் மூலம் ஏற்பட்ட அனுபவங்களைக் கொண்டு ,ஆன்மீக கருத்துக்களை உணர்த்தும் வகையான ஓவியங்களைச் செய்தார் என அறிய முடிகிறது. மேலும் வெளி நாடுகளிலிருந்தும் உள்ளூர்களிலிருந்தும் வந்து மிர்சா அல்பாஸாவிடம் ஆன்மீகம் பயிலும் ஓவியர்கள் தங்களது ஓவியப் பாணியிலும் மாற்றம் ஏற்பட, இஃது ஓர் வாய்ப்பாக அமைந்திருக்கிறது.

மிர்ரா அல்ஃபாஸா தனது ஓவியங்களின் மூலம் ,ஓவியத்தை வளர்த்தது மட்டுமின்றி ஆன்மீகத்தையும் வளர்த்திருக்கிறார் என்று கூற முடிகிறது. மேலை நாடுகளிலிருந்து பல வண்ணங்களை வரவழைத்து இங்குள்ள ஓவியர்களுக்கு வழங்கியும், வளரும் ஓவியர்களுக்கு ஓவியம் கற்பித்தும், பல்வேறு வகைகளில் ஓவியர்களை ஊக்கப்படுத்தியுள்ளார். பல புதிய ஓவியர்களை உருவாக்கியும் இந்தக் கலையை அடுத்தத் தலைமுறையினருக்கு எடுத்துச் சென்றுள்ளார். அஃது இன்றளவும் தொடர்ந்து கொண்டிருப்பதே மிகவும் குறிப்பிடத்தக்கது.அந்த வகையில் நோக்கினால் இவருடைய ஓவியப்பணி உண்மையிலேயே சிறப்புடையதாக நாம் உணர முடிகிறது. இவரின் வருகையால் ஐரோப்பிய ஓவியக் கலையானது இந்தியாவில், குறிப்பாகப் புதுச்சேரியில் பரவியுள்ளது என்றே கூறலாம். இதன் மூலம் ஐரோப்பியக் கலையின் தாக்கம் ,இந்தியாவிலும் இந்தியக் கலையின் தாக்கம் ,மேலை நாடுகளிலும், ஓர் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கும். அன்னையின் இத்தகைய கலைச் சேவை வளரும் ஓவியர்களுக்கும், ஓவியக் கலையின் வளர்ச்சிக்கும் ஓர் பங்களிப்பாக இருப்பது போற்றுதலுக்குரியது.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

**மேற்கோள்கள்**:

[1]Wikipedia, "Mirra Alfassa". https://en.wikipedia.org/wiki/Mirra_Alfassa, Retrieved 24 February 2023.
[2]Site of Sri Aurobindo & The Mother, https://auromaa.org/sri-aurobindo-ru/images/ma_paintings/index_14_e.htm P.18, Retrieved 27 February 2023.
3Navajata, Sri Aurobindo, National Book Trust, India, March 1972, P. 61.

[1]Sri Aurobindo Ashram,The Mother. Paintings and Drawings, Sri Aurobindo Trust, 1992. P.155.
[1]Site of Sri Aurobindo's & Mother's Yoga. https://sri-aurobindo.co.in/workings/other/van_vrekhem-mother.htm P.13, Retrieved 27 February 2023.

[1]Site of Sri Aurobindo's & Mother's Yoga.https://sri-aurobindo.co.in/workings/other/van_vrekhem-mother.htm P.17, Retrieved 27 February 2023.

[1] Sri Aurobindo. Autobiographical Notes and Others Writing of Historical Interest (Pondicherry: Sri Aurobindo Ashram, 2006) P.9.
[1]Georges Van Vrekhem. The Mother the Story of Her Life, Stichting Aurofonds, 2012.
[1]Interview with Ashram Studio [Art gallery] Incharge, Pondicherry, 31 October 2023, 10.am.
[1] Sri Aurobindo. https://motherandsriaurobindo.in/The-Mother/The-Mother-as-an-artist/paintings/ Retrieved 24 February 2023.[1]Wikimedia .https://commons.wikimedia.org/wiki/File:En_atelier_Peter_Paul_Rubens_-_Portrait_of_a_Young_Woman_-_250_-_Mauritshuis.jpg, Retrieved 25 February 2023.[1] Artble.https://www.artble.com/artists/peter_paul_rubens/more_information/style_and_technique, Retrieved 25 February 2023.

[1] The Met. https://www.metmuseum.org/art/collection/search/437439, Retrieved 25 February 2023.

[1] Britannica. https://www.britannica.com/biography/Pierre-Auguste-Renoir, Retrieved 25 February 2023.

[1] Britannica https://www.britannica.com/art/Impressionism-art

[1] The Telegraph https://www.telegraph.co.uk/art/what-to-see/claude-monet-find-london-lovelier-paint-day/, Retrieved 26 February 2023.

[1]Arthive.
https://arthive.com/publications/4749~style_in_art_technique_and_paintings_by_claude_monet

[1] The guardian. https://www.theguardian.com/artanddesign/2011/nov/15/john-berger-degas-ballet-dancers , Retrieved 26 February 2023.

[1] Caillebotte.

http://www.impressionniste.net/degas_edgar.htm#:~:text=French%20painter%20and%20sculptor%20Edgar,his%20perspective%20analysis%20of%20motion, Retrieved 26 February 2023.

**துணைநூற்பட்டியல்:**

Auromaa. https ://auromaa.org/the-mother-a-short-biography/ Retrieved February 24, 2023.

Sri Aurobindo, The Mother, With the Mother's Comments, Sri Aurobindo Ashram, Pondicherry, 2002

Tara Jauhar, Growing Up With the Mother, Sri Aurobindo Ashram Delhi Branch Trust, 1999.

The Mother, Questions and Answers 1950-51, Sri Aurobindo Ashram, Pondicherry, 2003.

Sri Aurobindo Ashram. https://motherandsriaurobindo.in/The-Mother/The-Mother-as-an-artist/drawings/ , Retrieved 26 February 2023.

Sothebys https://www.sothebys.com/en/art-movements/impressionism , Retrieved 26 February 2023.

கள்ளிப்பட்டி சுகுப்புசாமி., ஸ்ரீ அன்னை அரவிந்தர், ஏகம் பதிப்பகம்.

பி. கோதண்டராமன் ஸ்ரீ அரவிந்தர் வாழ்க்கை வரலாறு, பழனியப்பா பிரதர்ஸ், 2011.